தமிழ்த்தாய்

மறைமலையடிகள்

விலை 15 புதுக்காசுகள்

தமிழ்த்தாய்

"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கணவரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும்படுமோ"

—திருவிளையாடற்புராணம்.

தமிழராகிய நாம் நாடோறும் பேசிவருந் தாய் மொழி தமிழேயாகும். நாம் சிறு குழவியாய் இருந்த போது நம் அன்னையின் தீம்பாலைப் பருகிப் பசி தீர்ந்து அவள் மடியிற் கிடக்க, அவள் நம்மைக் கொஞ்சி முத்தம் வைத்து நம்மைப் பாராட்டிப் பேசியது தமிழ் மொழியிலன்றோ? சிறு குழந்தையாய் இருந்த அந்தக் காலந்தொட்டு மறுபடியும் நாம் இந்த உலகை விட்டு அகன்றுபோகும் வரையில் நம் தாய் தந்தையரோடும் உடன் பிறந்தவரோடும் மனைவி மக்களோடும் நம் நாட்டில் உள்ளவரோடும் நாம் ஊடாடி உறவாடிப் பேசுவதும் நம தருமைத் தமிழ் மொழியிலன்றோ? இங்ஙனம் நமது உயிரோடும் உடம்போடுங் கலந்து நமதறிவைத் தன் வண்ணம் ஆக்கிக், கனாக்காணுங் காலத்துங் கனவுலகில் உள்ளவரொடு நாம் பேசுகையில் அப் பேச்சோடும் உடன் வந்து நிற்பதாய்க் கிளர்ந்து விளங்குவது நமது இனிய செந்தமிழ் மொழியேயாய் இருத்தலின், நமதுயிர் இவ்வுலக வாழ்வைத் துறந்து மறுமையுலகிற் சென்று உலவும்போதும் நமக்கு உற்ற துணையாய் நம்மோடு உடன் வந்து நிற்பது தமிழ் மொழியே யாகுமென்பது தெளிவாகப் பெறப்படுகின்றதன்றோ? இவ்வாறு இம்மை மறுமை யிரண்டிலும் நமது உயிர்க்கு உற்ற துணையாய் இருந்து உதவுவது தமிழ் மொழி ஒன்றுமே யாகையால், நடுவே

நாம் கற்கும் ஆங்கிலம் ஆரியம் முதலான மொழிகள் அதுபோல் நமக்கு எப்போதும் உதவியுந் துணையுமாய் இருந்து பயன்படமாட்டா என்றுணர்க.

நமது வயிற்றுப் பிழைப்புக்காகவும், வேறு சில காரணங்களுக்காகவும் ஆங்கிலம் ஸமஸ்கிருதம் முதலான மற்ற மொழிகளை நாம் வருந்திக் கற்கவேண்டுவது கட்டாயமாய்த் தோன்றினாலும், இவற்றின் பொருட்டு நமது இனிய செந்தமிழை மறப்பதும் அதனைப் பயிற்சி செய்யாமற் கைவிட்டிருப்பதும் நமதுயிரையே நாம் அழிப்பதாய் முடியும். அழகு மிக்க செந்தாமரை மலரின் செந்நிறத்தையும் அதில் துளும்பி வழியுங் கொழுந்தேனையும் அகற்றிவிட்டு, அவற்றிற்கு மாறாய் அதற்கு மஞ்சள் நிறத்தை ஊட்டிச் செங்கழுநீர் மணத்தைப் புகுத்திக் கற்கண்டின் நீரைச் சொரிந்து வைப்பேன் என்று ஒருவன் அதன் இயற்கையை மாற்றப் புகுந்தால் அது கைகூடாமல் அத் தாமரை மலர் அழிந்துபோவது போல, மற்ற மொழிகளும் இனிய சொல்லுஞ் சிறந்த பொருளும் உயர்ந்த பயனும் உடையனவாய் இருந்தாலும், தமிழின் நிறமும் அதன் பொருளின் மணமும் அதன் சுவையின் தேனும் இயல்பாகப் பொருந்தப் பெற்ற நமதுயிரை அவ்வியற்கையினின்றும் மாற்றி அம் மற்ற மொழிகளின் தன்மையை அதற்கு ஏற்றினால் அது தன்றன்மை இழந்து அழிந்துபோகும். தமிழ்முதலான மொழிகளுள் ஒன்றையேனும் அல்லது இரண்டு மூன்றையேனுந் தமது குழந்தைப் பருவந்தொட்டுப் பேசிவருபவர், தாம் பேசும் அவ் இயற்கை மொழிகளையே மேலும் மேலுங் கற்றுத் தமது அறிவை வளம்படுத்தாமல் அவற்றைக் கைவிட்டு முற்றும் புதியவான ஆங்கிலம் ஆரியம் முதலான மொழிகளையே பழகி வருவராயின்

அவர் நீண்டநாள் உயிர் வாழ்வர். இதனாலன்றோ, தமிழைக் கைவிட்டு ஆங்கிலம் ஆரியம் முதலியவற்றையே கற்றுப் பழகும் நம் நாட்டவர் பலர் முப்பது அல்லது நாற்பது ஆண்டுக்குட் பலவகை நோய்களாற் பிடிக்கப்பட்டு மாய்ந்துபோகின்றனர்! தன்னியற்கையில் வலுப்பட்டு இல்லாத ஒருதூணின் மேற் பெருஞ் சுமைகளை ஏற்றினால் அவற்றைத் தாங்காமல் அது முறிந்து விழுவதுபோலத், தமக்குரிய மொழியைக்கற்று வலிவுபெறாத ஒருவனது அறிவின்மேல் வேறு மொழிகளை ஏற்றினால் அவற்றைத் தாங்கமாட்டாமல் அது பழுதுபட்டுப் போமன்றோ? தாய்ப்பால் நிரம்ப வுண்டு வளர்ந்த பிள்ளை ஆண்டு முதிரமுதிர அரியபெரிய முயற்சிகளை யெல்லாம் எளிதிற் செய்து நீண்டநாள் உயிர் வாழ்தல் போலத் தமிழ்ப்பால் உண்டு வளர்ந்தவர் எத்தகைய மொழிகளையும் வருத்தமின்றிக் கற்று நெடுநாள் உயிர் வாழ்ந்திருப்பர். தமிழொடு மற்ற மொழிகளையுங் கற்றவர் நீண்டகாலம் உயிர் பிழைத்திருத்தலுந், தமிழைவிட்டு அயல் மொழிகளை மட்டும் பயில்கின்றவர் விரைவில் உயிர் மாளுதலும் இயற்கையாய் நிகழ்தலைக் காண்பவர்களுக்கு நாம் கூறும் இவ்வுண்மை நன்கு விளங்கும்.

அறிவிற் சிறந்தவரான ஆங்கில நன்மக்கள் தமக்கு இயற்கையில் உரிய ஆங்கில மொழியை நன்றாகக் கற்ற பிறகுதான் வேறு மொழிகளைக் கற்கின்றார்கள்; தமதுமொழியைக் கல்லாமல் வேறு மொழிகளைச் சிறிதுங் கற்கவே மாட்டார்கள். இப்படிப்பட்ட உயர்ந்த பழக்கம் அவர்களிடத்தில் இருப்பதனாலேதான் அவர்கள் தமது மொழியில் நிகரற்ற புலமையுடையராய் இருப்பதொடு, தாம் கற்கும் வேறு மொழிகளிலும் வல்லவராய்ச் சிறந்து விளங்கி நீண்டநாள் உயிர்வாழ்ந்து உலகத்திற்கு

அளவிறந்த நன்மைகளை யெல்லாம் விளைவித்து வருகின்றார்கள். நம்மவர்களோ தமக்குரிய செந்தமிழ் மொழியைச் சிறிதுங் கல்லாமலுஞ், சிறிது கற்றாலுந் தமிழ் நூற்பயிற்சி நன்கு நிரம்பாமலும், வயிற்றுப் பிழைப்பிற் குறிய ஆங்கிலம் முதலான அயல்மொழி களையே மிகுந்த பொருட் செலவு செய்து, பல ஆண்டுகள் அல்லும் பகலும் உழைத்துக் கற்றுக் கொள்கின்றார்கள். கற்றும் என்! நம் தமிழ் நாட்டிற் குறிய தென்னங்கன்றைப் பெயர்த்துக் கொண்டு போய்ப் பனிமிகுந்த ஆங்கில நாட்டில் வைத்தால் அஃது அங்கே வளராமல் அழிந்துபோவது போல, நமது செந்தமிழைவிட்டு மற்றமொழிகளையே தம் காலமெல்லாங் கற்ற அவர் அதனால் வலிவிழந்து மெலிந்து விரைவில் உயிர் துறக்கின்றனர்! ஐயோ! வயிற்றுப் பிழைப்புக்கென்றே முழுதுங் கற்ற மற்ற மொழி அவரது பிழைப்புக்கே இடையூறு விளைத்து வருதலை நம்மவர் அறியாமல் வரவரத் தமது வாழ் வில் அருகிப்போவது நினைக்குந்தோறும் நமதுள் ளத்தை நீராய் உருக்குகின்றது! இந்நிலைமையைச் சிறிதாயினுங் கருதிப்பார்ப்பவர்கள் நமது தமிழ் மொழிப்பயிற்சி நம் உயிர் வாழ்க்கைக்கு இன்றி யமையாத அருமருந்தா மென்பதை உணராமற் போவரோ.

இது மட்டுமோ, இத் தென்னாட்டின்கண் நமது தமிழ்மொழியானது இருநூற்று மூன்று நூறாயிரத் துத் தொண்ணூற்றையாயிரம் பெயர்களாற் பேசப் பட்டு வருகின்றது. இத் தென்னாட்டில் மட்டுமே யன்றி, இலங்கையிலும் பர்மாவிலும் சிங்கப்பூர் பினாங்கு முதலான மலாய் நாடுகளிலும், மோரீசு தென்னாப்பிரிக்கா முதலான இடங்களிலும் நமது தமிழ் மொழியைப் பேசுவார் பெருந்தொகையாய்

இருக்கின்றார்கள். இவ்வளவு பெருந் தொகையாய் உள்ள தமிழ் மக்களெல்லாரும் அறிவிலும் நாகரிகத்திலும் உயர்ந்து விளங்க வேண்டுமாயின், அவர்கள் தமக்குத் தெரிந்துள்ள தமிழ்மொழியின் வழியாகவே அங்ஙனம் ஆகல் வேண்டும். மிகுந்த பொருட் செலவுங் காலக்கழிவும் வருத்தமுமின்றி அவர்களைக் கல்வியில் வல்லவராக்குதற்கு இசைவான இந்த எளிய முறையை விடுத்து, அவர்கட்குப் புதுமையாக ஆங்கிலம் ஆரியம் முதலான சொற்களைக் கற்பித்து அவர்களை உயர்த்தல் வேண்டுமென்று நினைப்பவர் ஒரு காலத்துந் தம் மெண்ணத்தை நிறைவேற்ற மாட்டார். ஆதலால், நம் தமிழ் மக்களை உண்மையாகவே முன்னேற்ற வேண்டுமென்னும் எண்ணம் உடையவர்கள், அவர்களுக்குரிய தமிழ்க் கல்வியின் வாயிலாகவே அதனைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். மற்றமொழிகளில் நாடோறும் புதியனவாய் வெளிவரும் அரும்பொருள் நூல்களை யெல்லாந் தமிழில் மொழி பெயர்ப்பித்துக் கற்பிக்கத் தலைப்பட்டால், இப்போது பதினைந்து ஆண்டுகளுக்குமேல் ஆங்கில மொழியை மிக வருந்திக் கற்று ஒருவர் தெரிந்து கொள்ளும் பொருள்க ளெல்லாம், நமது செந்தமிழ் மொழியில ஏழெட்டு ஆண்டுகளில் இன்னுஞ் செவ்வையாகக் கற்றுத் தேறலாம். ஆங்கிலம் ஆரியம் முதலிய மொழிகளில் அவர் எவ்வளவு தான் கற்றுத் தேறினலும், தாம் அம் மொழிகளில் அறிந்த பொருள்களைத் தமிழ் மக்கள் எல்லார்க்கும் புலப்படும்படி எடுத்துச் சொல்லிப் பயன்படுத்தல் இயலாது; தமிழ் கற்றவரோ தாம் அறிந்தவைகளைத் தமிழ்மக்களெவர்க்கும் நன்கு விளங்கும்படி எடுத்துச் சொல்லிப் பெரிதும் பயன்படுபவர். இதனல் தமிழ் நாட்டவர் தமிழ்கற்ப தொன்றே தமக்கும் பிறர்க்கும் பயன்படுவதற்கு ஏதுவாம் என்க.

இனி, ஏழெட்டு நூற்றாண்டுகளாய்ப் புதிது முளைத்தெழுந்து இப்போது ஆங்காங்கு வழங்கி வரும் பல வேறு மொழிகளையும் போல்வ தன்று நமது தமிழ் மொழி; இஃது இன்ன காலத்திலேதான் தோன்றியதென்று எவராலுங் கட்டுரைத்துச் சொல்ல முடியாத பழமையுடையதாய், இத்தனை காலமாகியுந் தனது இளமை சிறிதுங் குன்றாதாய் உலாவி வருகின்றது. தமிழைப் போலவே பழமை யுடையன வென்று சொல்லத்தக்க ஆரியம் கிரேக்கு இலத்தீன் ஈபுரு அராபி சீனம் முதலான பலதேய மொழிகளெல்லாம் இப்போது உலக வழக்கில் இன்றி இறந்தொழிய, நம் செந்தமிழ் மொழி ஒன்றுமே எல்லாம் வல்ல இறைவனைப்போல் என்றும் இறவாத இளமைத்தன்மை வாய்ந்து இலங்குகின்றது. இவ்வுண்மையை மனோன்மணீயத்தில்,

> "பல்லுலகும் பலவுயிரும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர், எல்லையறு பரம்பொருள் முன்னிருந்த படியிருப்பதுபோற், கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையாளமுந் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும், ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாநின், சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"

என்று வந்த தமிழ்த்தாய் வணக்கச் செய்யுளிலுங் கண்டுகொள்க.

பழமையில் இதனோடு ஒத்த ஆரியம் முதலான மொழிகளெல்லாம் இறந்தொழியவும், இதுமட்டும் இன்னும் இளமையொடு விளங்குவது எதனால் என்றால்; தமிழ் அல்லாத மற்ற மொழிகளில் எல்லாம் மக்கள் இயற்கைக்கு மாறான உரத்த ஓசைகளும் பொருந்தா இலக்கண முடிபுகளுங் காணப்படுதலால் அவை வழங்குவதற்கு எளியனவாய் இல்லா

மல் நாளடைவில் மாய்ந்துபோகத் தமிழில் இயல்பாற் பிறக்கும் அமைந்த இனிய ஒலிகளும் மிகவும் பொருத்தமான இலக்கண முடிபுகளும் இயைந்து, இஃது ஓதுதற்கு எளிதாய் இருத்தலினாற்றான் அங்ஙனம் இஃதின்னும் இளமை குன்றாமல் நடைபெறுகின்றதென்று உணர்ந்துகொள்க. 'க்ருதம், 'த்ருஷ்டி' 'த்வரிதம்' 'ச்ருஷ்டி' 'ஹ்ருதய' முதலான ஆரியச் சொற்களைச் சொல்லிப்பாருங்கள்! அவை பேசுதற்கு எவ்வளவு வருத்தமாய் இயற்கைக்கு மாறுபட்டனவாய் இருக்கின்றன! இச்சொற்களையே தமிழ்வடிவாகத் திரித்துக் 'கிருதம்' 'திருட்டி' 'துரிதம்' 'சிருட்டி' 'இதயம்' என்று சொல்லிப்பாருங்கள்! அப்போது அவை பேசுதற்கு எவ்வளவு எளியனவாய் வருத்த மில்லாதனவா யிருக்கின்றன! இனி, இவற்றிற்கு நேரான 'இழுது' 'பார்வை' 'விரைவு' படைப்பு' 'நெஞ்சம்' முதலான தூய தமிழ்ச் சொற்களைச் சொல்லிப்பாருங்கள்! இவை அவற்றைக்காட்டிலுஞ் சொல்லுதற்கு இன்னும் எத்தனை எளியவாய் இனியவாய் இருக்கின்றன! இங்ஙனமே ஆரியம் முதலான மற்றமொழிகளின் இலக்கணங்கள் இயற்கைக்கு மாறாய் இருத்தலும், தமிழ் இலக்கணம் ஒன்றுமே இயற்கைக்குப் பொருத்தமாய் இருத்தலும் நாம் எழுதிய **ஞானசாகர** முதற்பதுமத்திலும், **பண்டைக்காலத் தமிழர் ஆரியர்** என்னும் நூலிலுங் கண்டுகொள்க. இங்கே அவையெல்லாம் விரித்துரைப்பதற்கு இடமில்லை. அது நிற்க.

இனி, மொழியின் அமைப்பையும் மக்களியற்கை உலக இயற்கைகளையுந் திறம்பட விரித்துரைத்த **தொல்காப்பியம்** போன்ற மிகப் பழைய நூலை நமது செந்தமிழிலன்றி வேறு மொழிகளிற் காணல் இயலுமோ? அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் முற்றும் எடுத்து விளக்

கிய **திருக்குறள்**, **நாலடியார்** போன்ற அரும்பெரு நூல்களை நம் செந்தமிழ் மொழியன்றி வேறு எந்த மொழியேனும் உடையதாமோ? **சிலப்பதிகாரம்**, **மணிமேகலை** என்னும் பெரும் பழந்தமிழ்க் காப்பியங்களோடு ஒத்தவை எம் மொழியிலேனும் உளவோ? உலக வியற்கை பிறழாது பாடிய **பத்துப்பாட்டு**, **கலித்தொகை** முதலான பழைய தமிழ்ப் பாட்டுகளுக்கு நிகரானவை வேறெந்த மொழியிலேனும் எடுத்துக்காட்டல் இயலுமோ? **திருவாசகம்**, **திருச்சிற்றம்பலக்கோவை**, **தேவாரம்**, **பெரியபுராணம்** என்னுந் தெய்வத் தமிழ் நூல்கள், கன்னெஞ்சமுங் கரைந்துருகி எத்திறத்தவரும் இறைவன் அருட்பெருக்கில் அமிழ்ந்தி இன்புருவினராய் நிற்குமாறு செய்தல் போல, வேறு எந்த மொழியில் உள்ள எந்நூலேனுஞ் செய்தல் கண்டதுண்டோ? மக்கள் முடிவாய்த் தெரியவேண்டும் மெய்ப்பொருள்களை யெல்லாந் தெளித்துக்கூறி முடிவுகட்டிய **சிவஞானபோதம்**, **சிவஞானசித்தி** போன்ற மெய்ந்நூல்களும், அவற்றிற்கு மெய்யுரை விரித்த **சிவஞான முனிவர்** நுண்ணுரை போன்ற உரைநூல்களுந் தமிழிலன்றி வேறெந்த மொழியிலேனுங் காணப்படுவதுண்டோ? இந்நூற் பொருள்களென்னுந் தீம்பாலை நமதுயிரெல்லாந் தித்திக்கக் குழைத்தூட்டும் நம் தமிழ்த்தாயை மறவாது பேணும் பெரும்பேற்றை நம் தமிழ்மக்கள் எல்லாம் பெற்றுச் சிறந்திடுவாராக!